IN THE COURT OF III ADDITIONAL DISTRICT COURT,
TIRUVALLUR AT POONAMALLEE

**O.S.40/2017**

Deposition of witness for the Plaintiff/PW1

Name :Hemamalini Date: 06.03.2023

Husband's Name : Rupkumar

**1-வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவர் 24/01/1998 அன்று இறந்தார். எனது மாமியார் இராமசுப்பம்மாளின் வாரிசுதாரர்கள், எனது கணவர், அவரின் சகோதரி இந்துமதி மற்றும் அவரின் சகோதரர் பாலகிருஷ்ணா. நான் தற்போது விஜயவாடாவில் வசித்து வருகிறேன். 2005ல் நான் எனது வேலைக்காக சென்னையிலிருந்து ஹைதராபாத் சென்றேன். அதன் பின்னர் 2017லிருந்து விஜயவாடாவில் வேலை செய்து வசித்து வருகிறேன். தாவா சொத்துக்களில் முதாலவது ஐட சொத்து எனது மாமியாருக்கு சொந்தமானது. இரண்டாவது ஐட சொத்து எனது மாமியாருக்கும் எனது கணவருக்கும் சொந்தமானது. 1933ஆம் வருடம் எனது கணவரின் கொள்ளு தாத்தா சுப்புராய ரெட்டியார் 30 சென்ட் விஸ்தீரணம் உள்ள சொத்தை கிரையம் வாங்கியது எனக்கு தெரியும். சுப்புராய ரெட்டியார் அந்த சொத்து குறித்து எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரியும். தம்பு ரெட்டியார் அவரது வாரிசுதாரர். தம்பு ரெட்டியார் 1971 ல் ஒரு கூர் சீட்டு எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த கூர் சீட்டின் படி அந்த சொத்தை நான்கு நபர்களுக்கு பாகபிரிவினை செய்து வைத்தார். அதன் படி அந்த நான்கு நபர்கள் எனது கணவர், பாலகிருஷ்ணா, தம்பு ரெட்டியார் மற்றும் ராமதாஸ் ரெட்டியார். அவர்கள் நால்வருக்கும் தலா 7.5 சென்ட் கிடைத்தது. மேற்கூறிய ராமதாஸ் ரெட்டியார் எனது மாமனார். தம்பு ரெட்டியார் தன்னிடம் 7.5 சென்ட் சொத்தை வைத்துக்கொண்டார். மொத்த சொத்தின் சர்வே எண் ஆதியில் 324/1 ஆக இருந்தது. பிராதின் அட்டவணையில் முதல் ஐடத்தில் சர்வே எண்.324/1க்கான மொத்த விஸ்தீரணமான 30 சென்ட் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் ஐட சொத்தான 7.5 சென்ட் பின்னிட்டு சர்வே எண்.342/1சி ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ராமதாஸ் ரெட்டியார் இறந்த பின்னர் தனக்கு வந்த 7.5 சென்ட் குறித்து அவரது வாரிசுதாரர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது மாமியார் இராமசுப்பம்மாள் 3.5 சென்ட்டை முதலாவது பிரதிவாதியின் கணவரான பாலகிருஷ்ணாவிற்கு செட்டில்மென்ட் பத்திரம் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. பாலகிருஷ்ணாவிற்கு வந்த 7.5 சென்ட்டுடன் மேற்கூறிய 3.5 சென்ட்டையும் சேர்த்து 11 சென்ட்டுக்காக அவர் பெயரில் பட்டா 2003ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்கூறிய 3.5 சென்ட் பாலகிருஷ்ணாவின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்து அவர் இறந்த பின்பு அவரின் மனைவியான 1வது பிரதிவாதியின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் தற்போது இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அந்த 3.5 சென்ட் சொத்திற்கான சொத்து வரி

மற்றும் ஏனைய வருவாய் ஆவணங்கள் பாலகிருஷ்ணா பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3.5 சென்ட் சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் பாலகிருஷ்ணாவின் இறப்பிற்கு பின்னர் அவரது மனைவியான முதலாவது பிரதிவாதியின் பெயரில் மாற்றலாகி உள்ளது என்றால் சொத்து வரி மாற்றலாகியுள்ளது மற்ற ஆவணங்கள் மாற்றலாகவில்லை. மேற்கூறிய 3.5 சென்ட் விஸ்தீரணத்தை தவிர்த்து மீதமுள்ள 4 சென்ட் விஸ்தீரணத்திற்கு தான் நான் பங்கு கோரமுடியும் என்றால் சரியல்ல. ஐடம் நம்பர் 1 சொத்தில் உள்ள கடைகள் மற்றும் வீடு முதலாம் பிரதிவாதி வாடகை பெற்று வருகிறார் என்றால் சரிதான். நான் மூன்று கடைகளுக்கான வாடகையை பெற்று வருகிறேன். அந்த வாடகைதாரர்களின் பெயர் முருகேசன், கிரி மற்றும் இன்னொருவர். எனது மாமியார் இறந்த பின்னர் நான் மூன்று கடைகளுக்கான வாடகையை பெற்று வருகிறேன். அந்த சொத்திலுள்ள வீடு பாலகிருஷ்ணாவிற்கு செல்லவேண்டும் என்றால் சரியல்ல. எனது மாமியார் இராமசப்பம்மாள் செல்வராஜ் என்பவரிடமிருந்து ரூ.2,00,000 வட்டிக்காக கடன் பெற்றார் என்றால் சரிதான். அந்த தொகையை பாலகிருஷ்ணா தான் திருப்பி செலுத்தினார் என்றால் சரியல்ல. நானும் முதலாவது பிரதிவாதியும் பாதி பாதியாக பகிர்ந்து அந்த கடனை செலுத்தினோம். எப்போது நான் எனது பங்கை செலுத்தினேன் என்று எனக்கு நினைவில்லை. இராமசப்பம்மாள் தான் உயிரோடு இருந்த போது உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. இராமசப்பம்மாள் உயில் எழுதி வைத்ததாக யாரும் தெரிவித்தனரா என்றால் இல்லை. ஐடம் நம்பர் 1ன் உடைய விஸ்தீரணம் பாகப்பிரிவினைக்காக 4சென்ட் மட்டுமே உள்ளது என்றால் சரியல்ல.

(2மற்றும் 3வது பிரதிவாதிகள் தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)